விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 25 வெள்ளிக்கிழமை (08.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

ராம்கோ

MADRAS CEMENTS LTD.

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர் பஸ்களில் ஏற்றப்பட்டு வெளியேற்றப்பட்டனர்

- அதிகாலை வேளையில் அராஜகம்
- குழந்தைகள், பெண்கள் பெரும் பரிதவிப்பு
- காலைக் கடனுக்கும் கால அவகாசம் இல்லை

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கி இருந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை பொலிஸார் பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர். வெள்ளவத்தை, முகத்துவாரம், கொழும்பின் மத்திய பகுதி உட்பட பல இடங்களில் ஒப்பீட்டளவில் குறைந்த செலவுள்ள விடுதிகளில் தங்கிருந்த நூற்றுக்கணக்கான தமிழர்கள் நேற்று அதிகாலை அங்கு வந்த ஆயுதம் தாங்கிய பொலிஸாரால் பலவந்தமாக பஸ்களில் ஏற்றப்பட்டுள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)



## பிரதேச செயலகங்களில் தே.அ.அட்டை வழங்க ஏற்பாடு

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை பன்முகப்படுத்தப்படவுள்ளதாகவும் எதிர்காலங்களில் பிரதேச செயலகங்களில் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இத னை முன்னிட்டு அனைத்து பிரதேச செயலகங்களிலும் தனியான ஆட்பதிவு திணைக்களப்பிரிவுகளைத் திறப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரி

# வடக்குக் கிழக்கு 'தனிநாடு' என்பதை அரசு ஏற்றுள்ளது

## நாடாளுமன்றில் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு தமிழீழம் என்ற தனிநாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கொழும்பு

கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டதை கண்டித்து நேற்று பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு ஆற்றிய உரையில்;

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் நாங்

ஏனென்றால் அண்மைக்காலம் வரை இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு தனிநாடு ஒன்று கிடைக்குமா? அல்லது கிடைக்காதா? என்ற ஆதங்கம் இருந்து வந்தது.

ஆனால் உங்களைப் போன்ற நபர்கள் இருக்கும்வரை இன்று நாட்டில் இருக்கக்கூடிய கொள்கை வகுப்பாளர்கள் இருக்கும்

அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார். (ந-5)

நேற்று நாடாளுமன்றத்தில் கொழும்பு விடுதிகளிலிருந்து பலவந்தமாக வடக்குக்

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் நாங்கள் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றோம்.

இருக்கும்வரை இன்று நாட்டில இருக்கக்கூடிய கொள்கை வகுப்பாளர்கள் இருக்கும் வரை தமிழீழம் என்ற(08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களை வெளியேற்றுவது அரசின் முட்டாள்தனமான செயல்

## நாடாளுமன்றில் ஜே.வி.பி.சாடல்

(கொழும்பு)

கொழும்பு விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் மக்களை பஸ் வண்டிகள் மூலம் வடக்குக் கிழக்குப் பகுதிகளிற்கு அனுப்பிவைப்பதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கண்டித்துள்ளது.

இது அரசாங்கம் எடுத்த மிகவும் முட்டாள்தனமான முடிவென்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கா நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று குறிப்பிட்ட அவர், பஸ் வண்டிகள் மூலம் அனுப்பப்படுபவர்களை மீண்டும் அழைத்துவர வேண்டுமென்று அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

விடுதிகளிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவது தொடர்பாக நாடாளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணை விவாதத்தில் இணைந்துகொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.(ந-5)

# யூதர்களை வெளியேற்றியது போல் நாம் நடந்து கொள்கின்றோம்

## நாடாளுமன்றில் ரணில் ஆவேசம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 11 ஆவது உறுப்புரையில் எந்தவொரு நபரும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படவோ இழிவாக நடத்தப்படவோ தண்டிக்கப்படவோ முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் எவரும் எந்தப் பகுதியிலும் வசிப்பதற்கான உரிமையும் நடமாடுவதற்கான சுதந்திரமும் 14 ஆவது உறுப்புரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாம் தென்னாபிரிக்கா போன்ற நிலைக்கு செல்கின்றோம்.தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ஜேர்மனியில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டது போன்றா நாம் செயற்படுகின்றோம்? அல்லது பலஸ்தீனத்திலிருந்து அரேபியர்கள் சிலர் வெளி (08 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு விடுதிகளில் இருந்த 302 பேர் வடக்கு கிழக்கிற்கு அனுப்பிவைப்பு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு விடுதிகளிலிருந்து வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 302 பேர் பஸ் வண்டிகள் மூலம் அவர்களின் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என அமைச்சர் ராஜித சேனாரட்ண நேற்றுப் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.கொழும்பு விடுதிகளில் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் வரை தங்கியிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் தொடர்ந்தும் தங்கியிருப்பது அவசியமில்லை என்பதை உறுதிசெய்யப்பட்ட பின்னரே அவர்களை பஸ் வண்டிகள் மூலம் அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பஸ் வண்டிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட பலருக்கு தமது அடையாளத்தை உறுதி செய்ய முடியா மல் (08 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு புதிய விடுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு புதிய விடுதி ஒன்றையும் தொழில் நுட்பக் கல்லூரிக்கு புதிய கட்டடமொன்றையும் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றுக்கான நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுரபிரியதர்சன (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்குப் போர் முனையில் 200 இராணுவத்தினர் பலி -ஐ.தே.க.

(கொழும்பு)

வட போர் முனையில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் மோதலில் இராணுவத்தினர் 200 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றில் ஐ.தே.கவின் ஜோன் அமரதுங்க கூறியதாவது; கடந்த மூன்று தசாப்த காலங்களைவிட கடந்த ஆண்டு குற்றச்செயல்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. 61 ஆயிரத்து 196 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

இந்தஆண்டு இதுவரை 4 ஆயிரம் குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. வடபோர் முனையில் கடந்த சில நாட்களில் 200 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். இருப்பினும் அந்தத் தகவல்களை மக்களிடத்தில் அரசாங்கம் மறைத்துவிட்டது.

இதுவரை 90 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர். அதேபோல் விடுதலைப் புலிகளால் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் இராணுவத்தினரின் உடல்களைப்பெற வேண்டாம் என்று இராணுவ உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஓமந்தை, மடு ஆகிய இடங்களில் தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகின்றது. ஆகையால் இராணுவத்தினர் பலியாகும் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார் ஜோன் அமரதுங்க. (ந-5)

## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள அஞ்சல் சேவையின் 'ஆ' தரம் I 'ஆ' பிரிவு அஞ்சல் சேவை உத்தியோகஸ்தர் பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு யா/வடமராட்சி சென்றல் கல்லூரி பருத்தித்துறை எனக் குறிக்கப்பட்டது யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி கரவெட்டி என்பதாகும். எனவே சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் கரவெட்டியிலுள்ள யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றுமாறும்,

யாழ்.மத்திய கல்லூரி பரீட்சை நிலையம் மண்டபம் இலக்கம் III தவிர்க்க முடியாத காரணத்தினால் யா/வேம்படி மகளிர் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளதால்யாழ்.மத்திய கல்லூரி பரீட்சை நிலையம் மண்டப இலக்கம் III இல் தோற்றவிருந்த பரீட்சார்த்திகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (அ)

## புகைத்தல் எதிர்ப்பு வாரம்

(காரைநகர்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரம் காரைநகர் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. புகைத்தல் எதிர்ப்புத் தினமான மே 31 ஆம் திகதியிலிருந்து ஜூன் 6 ஆம் திகதிவரை இந்நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் புகைத்தல் எதிர்ப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு புகைத்தல் எதிர்ப்புப் பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது. (ந-246)

# வலுவற்ற விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு விசேட இருக்கைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)



வலுவற்ற விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விசேட இருக்கை வழங்கிய நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் ஜெபா மண்டபத்தில் இயக்குநர் வண.பிதா கி.யோ.ஜெயக்குமார் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஒவ்வொன்றும் ரூபா 12 ஆயிரம் பெறுமதியான ஆறு குழந்தைகளுக்கான விசேட இருக்கைகளும் ரூபா 4 ஆயிரம் பெறுமதியான ஒரு குழந்தைக்கான முக்கோண வடிவ இருக்கையும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஞானஜோதி, டாக்டர் மருதனார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விசேட திட்டம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினூடாக சமூக தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவும் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனமும் இணைந்து நடாத்தப்பட்டு வருகின்றது.

இதுவரையில் சுமார் 45 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னுரிமை அடிப்படையில் 25 குழந்தைகளுக்கான விசேட இருக்கைகளை இந்த ஆண்டுக்குள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ந)

# மக்கள் வங்கியில் அடகு நகை ஏல விற்பனை

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத்திலுள்ள கிளைகளில் 31.12.2005 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீளப் பெறப்படாத நகைகள் யாவும் 2007 ஜூன் மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் நெல்லியடிக் கிளையிலும் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இதுவரை நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் இல்லையேல் வட்டியினைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# யுத்தத்தில் பலியாகின்ற புலிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் தமிழ்நாட்டில் உள்ளவர்களும் இறந்திருக்க வேண்டும்

**அபிவிருத்தி, யுத்தவெற்றி எல்லாமே அமைச்சர்களின் பேச்சில் மாத்திரம்தான் என்கிறார் ரவி கருணாநாயக்க**

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறுகின்ற யுத்தத்தில் பலியாகின்ற புலிகளின் எண்ணிக்கையை அரச ஊடகங்கள் மிகைப்படுத்துகின்றன. இதனைப்பார்த்தால் தமிழ் நாட்டுத் தமிழர்கள் பலரும் பலியாகியிருக்க வேண்டும். இந்த அரச ஊடகங்கள் மூலமாகவே அரசாங்கம் நாட்டையும் அபிவிருத்தி செய்கின்றது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, நாடு நாளுக்கு நாள் இருளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் கொலை, கொள்ளை, கடத்தல்கள் அதிகரித்துள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் பல முறைகேடுகள் இடம்பெற்றன.

தெற்கு ஆதரவு ஜனாதிபதிக்குக் கிடைத்தது. இலங்கைக்கு சர்வதேசத்தின் ஆதரவு விலகிச் சென்று கொண்டிருக்கின்றது. புதியஅரசாங்கம் நேர்மையான ஆட்சி என்றனர். பாரிய எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எல்லாமே முடிந்துவிட்டது.

ஐ.தே.க. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியபோது புலிகளை பலநாடுகள் தடை செய்தன. ஆனால் இன்று ஒன்றுமே நடைபெறவில்லை. புலிகளை அழிப்பதற்கு இன்று பல முயற்சிகள் இடம்பெறுவதாகக் கூறுகின்றார்கள். ஆனால் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் பீதமுதலைகாலை மலைபோல உயர்ந்து செல்கின்றது.

வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றபோது அரசாங்கம் குழுவாக செயற்பட முடியாது. ஜே.வி.பி. அரசுடன் இருக்கின்றது? இல்லையா? பௌத்த அரசாங்கத்தை ஏற்படுத்தப் போவதாக ஹெலஉறுமய தெரிவித்திருந்தது.தயவுசெய்து பௌத்தத்தை நாசமாக்கி விடாதீர்கள்.

பலியான புலிகளின் எண்ணிக்கை தொடர்பாக ஊடகங்களில் வெளியாகின்ற தகவல்களைப் பார்த்தால் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களையும் கொன்று குவித்திருப்பார்கள். ஒரு சொட்டு இரத்தம் சிந்தாது சமாதானத்தைக் கொண்டு வருவதாகக் கூறிய அரசாங்கத்திற்கு இன்று என்ன நடக்கின்றது?

ஆட்சி செய்ய முடியாவிட்டால்எங்களிடம் ஆட்சியைத்தாருங்கள். சமாதானத்தை நாங்கள் ஏற்படுத்துகின்றோம். (ந-5)

# இராசிபலன்

*08.06.2007*
*வைகாசி 25, வெள்ளிக்கிழமை*
*அட்டமி பிற்பகல் 1.26 மணிவரை*
*சதயம் முற்பகல் 9.09 மணிவரை*
*இராகுகாலம் 10.22 - 11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52-7.22 மணிவரை*

| | |
|---|---|
| மேடம்:- | தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு,விருந்துபசாரம் |
| இடபம்:- | புதிய திருப்பம், தூர தேசச் செய்தி, அதிக பிரயாசை , இஷ்டசித்தி. |
| மிதுனம்:- | கட்டுப்பாடு ,சரீரப் பிரயாசை ,பயந்த சுபாவம், பயணம். |
| கடகம்:- | வீண்பகை ,தெய்வ நம்பிக்கை , காரிய தாமதம்,எதிர்பாராத நன்மை. |
| சிங்கம்:- | தெய்வதரிசனம், தேக நலன், கலந்துரையாடல்,தொழில் விருத்தி. |
| கன்னி:- | தடைப்பட்ட காரியம் கைகூடும்,சத்துரு ஜெயம்,தெய்வ சிந்தை ,போசனசுகம். |
| துலாம்:- | புத்திரரால் கவலை , அஜீரண ரோகம்,காரிய இடையூறு,புதிய விடயம். |
| விருச்சிகம்:- | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்,சுபசெலவு,ரோக நிலை. |
| தனுசு:- | இனிய சம்பவம்,நற்கீர்த்தி, போசன சுகம், தெய்வ சிந்தை. |
| மகரம்:- | மனோசங்கடம், காரிய இடையூறு, தனவிரயம், சொத்துப் பிணக்கு. |
| கும்பம்:- | சயன சுகம்,வெகுமானம், நல்ல வரவேற்பு,தெய்வ சிந்தனை. |
| மீனம்:- | காரிய அலைச்சல், சோம்பல் நிலை , திடீர் நன்மை , பிறர் உதவி. |

-வளவன்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

***வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி தேர்வு - 2006***
***முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடங்கள்***
**முதலாம்/இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள்**
**(பழைய பாடத்திட்டம்)**
**விசேட பரீட்சை**

மேற்படி விசேட மீள் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை 08.06.2007 முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிடம் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் 20.06.2007 அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:- *எமது முன்னைய 11.08.2006 ஆம் திகதிய விளம்பரத்துக்கமைய, விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.*

(c-152)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

***வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி தேர்வு - 2006***
***முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் -2006***

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பின்வரும் முதலாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் 15.06.2007 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் 22.06.2007 அன்று அல்லது அதற்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

முதலாம் வருடம் (G.P.V.முறை)
இரண்டாம் வருடம் பகுதி I (G.P.V.முறை)
மூன்றாம் வருடம் பகுதி II (G.P.V.முறை)
நான்காம் வருடம் பகுதி III

குறிப்பு:- *பரீட்சைக்குரிய நேர அட்டவணையை மாணவர்கள் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்.*

-பதிவாளர்

(c-153)


## மயான ஓடுகள் களவாடப்படுகின்றன

காரைநகர் சாம்பலோடை இந்து மயான மடத்தின் கூரை ஓடுகள் விசமிகளால் களவாடப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம் மயானம் கடற்கரையோரமாக அமைந்திருப்பதனால் ஆள் நடமாட்டம் அற்ற நேரத்திலேயே ஓடுகள் களவாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-246)


### மணமகள் தேவை

உயர் வேளாளர், கார்த்திகை 4 ஆம் பாதம், கிரகபாவம் 14, வயது 37 உடைய B.Sc ஆசிரியருக்கு தகுந்த அழகான மணமகள் தேவை. தொடர்பு:-
077 6006579 (114)

### தேவை

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
**மானிப்பாய்**

250 ELF கட்டை மொடல் வாகனத்திற்கு மேல் (Body) கூடாரம் தேவைப்படுவதால் விற்பனைக்கிருந்தால் மேல் விலாசத்திற்கு அறியத் தரவும்.
தொ.பே.இல. 7543 (c-154)



# தரிசனம்

ராவய ராவய

# தமிழ் மக்களின் சிங்களவர் மீதான எதிர்ப்பு

## தெற்கின் கருத்து

### தென்னிலங்கை மீது நம்பிக்கை கொள்வதற்கு காரணங்கள் ஏதும் இல்லை

சட்டத்தரணி டபிள்யூ. ஏ.அபேசிங்க

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகாவின் காலப்பகுதியில் ஓரளவு முயற்சிகள்



எடுக்கப்பட்டமையை உணரக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக இரு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு இடை வெளியைக் குறைப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டமையையும் காணக்கூடியதாகவிருந்தது. இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வழியில் அது சிறந்ததொரு அணுகுமுறையாகவும் அமைந்தது. குறிப்பாக மக்கள் கட்சியுடன் இணைந்து பணியாற்றிய இடதுசாரிக் கொள்கை கொண்ட அனைத்து கட்சிகளும் அன்று இந்த நிலைப்பாட்டினையே கொண்டிருந்தன. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு சிறந்த முறையில் தீர்வுகாண வேண்டும் என்ற ஒருமித்த கருத்துடன் அவர்கள் அனைவரும் செயற்பட்டனர். பின்பு கட்சிகள் சிறிய குழுக்களாக பிளவடைந்த போது 94இன் பின்னர் அந்த நிலைப்பாடு தேசியப் பிரச்சினை தொடர்பான சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக மாற்றம் பெற்றது. இந்த சந்தர்ப்பத்தில் இந்தப் போக்கினை எதிர்த்த நபராக மஹிந்த ராஜபக்ஷ இருந்தார்.

முன்னைய நிலைப்பாடுகள் எதுவும் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இல்லை. ஜே.வி.பி. சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தும் சிங்கள இனவாதமும், ஹெல உறுமய கட்சி கருத்தியல் ரீதியில் பின்பற்றும் இனவாதமுமே சுதந்திரக் கட்சியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இன்று அந்த கட்சிகளின் கருத்துக்களே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகவும் உள்ளது.

சுதந்திரக்கட்சி போன்ற பெரியதொரு கட்சிக்கு தலைவரின் கருத்தைத் தவிர வேறு கருத்து நிலைப்பாடுகள் எதுவும் இருக்க முடியாது என்பதே இதன்மூலம் தெளிவாகின்றது. சந்திரிகா இருக்கும் பொழுது அவரது கருத்துக்களைப் பின்பற்றினர். தற்போது ராஜபக்ஷவின் கருத்தினை ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறாயின் இந்தக் கட்சியின் நிலைப்பாடுதான் என்ன?

இனப்பிரச்சினை தொடர்பில் சுதந்திரக்கட்சி கையாலாகாத நிலையில் உள்ளது. தமிழ் மக்களுடன் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்ற சிந்தனை தெற்கில் ஏற்படுகின்ற போது சுதந்திரக் கட்சி அந்த சிந்தனையை அழித்துவிடுகின்றது. இனவாதம் என்ற எண்ணம் திரிபுபடுத்தப்பட்டதாகும். சிங்கள மக்களின் எண்ணம் இனவாதம் சார்ந்தது என்று நான் கருதவில்லை. எனினும் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகிட்டும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இதுவரை ஏற்படவில்லை என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் அதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் நம்பிக்கைத் தன்மை கட்டியெழுப்பப்படும் என்று நம்புவதற் கும் இடமில்லை.

சுதந்திரக் கட்சியின் யோசனைகளில் திருத்தம் செய்ய தேவையில்லை என்று சுதந்திரக்கட்சியினரே தெரிவிக்கின்றனர். அவ்வாறாயின் சர்வ கட்சி மாநாடு எதற்கு? இந்த யோசனைகள் யுத்தத்திற்கு விடுக்கப்படும் அழைப்பாகும்.

### நம்பிக்கையைப் பெறுவதற்கு நேர்மைத் தன்மை வேண்டும்

பிரபல எழுத்தாளர்

கெத்லின் ஜயவர்த்தன

மனிதன் முதலில் தனது மனச்சாட்சிக்கு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். சிங்களவர்களாகிய நாம் நமக்கே நேர்மையாக இல்லை. அவ்வாறாயின் நாம் தமிழ் மக்களிடம் நேர்மையாக நடந்து



கொள்ள முடியுமா? குறிப்பாக சகோதர தமிழ் இனத்தவர் தொடர்பில் செயற்படும் போது சிங்களவர்கள் முதலில் தமது அனுபவங்களை சகோதர தமிழினத்தவருடன் இணைத்து சிந்தித்து பார்த்தே செயற்படவேண்டும்.

நாம் பெரும்பான்மையினத்தவர் அல்லது சிங்களவர் என்ற ரீதியில்சிந்திக்காமல்நாமும்தமிழ் இனத்தவரானால் எவ்வாறிருக்கும் என்று சிந்தித்துப் பார்க்காமலேயே இதுவரை அனைத்துச் செயல்களும் நடைபெற்றுள்ளன. இனங்களுக்கிடையில் அல்லது வேறு அடையாளத்திற்காக இடம்பெறும் மோதல்களை தீர்க்கக்கூடிய உலக யதார்த்தம் அதுவாகும். நாம் பெரும்பான்மையினர் என்ற வகையில் இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாத வரையில் தமிழ் மக்களின் சிங்கள மக்கள் தொடர்பான எண்ணப்பாடும் ஒரே விதமானதாகவே அமையும். சிங்கள மக்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ள வேண்டுமாயின் நேர்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டியதே அவசியமாகும்.

### தமிழ் மக்களுக்குஇருப்பது நியாயமான வெறுப்புணர்வு

சமூக செயற்பாட்டாளர்

ஷீலா விக்கிரமசிங்க

.56லிருந்து நாம் தமிழ்மொழியை சிங்கள மொழியிலிருந்து விலக்கியே வைத்துவிட்டோம். தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்த முதற் சம்பவம் அதுவாகும்: நாம் தனித்துப் போராடி இந்த நாட்டின் சுந்திரத்தைப் பெற்றுவிடவில்லை. பொன்னம்பலம் இராம



நாதன், சுந்தரலிங்கம் ஆகியோரும் மற்றும் இதர முஸ்லிம் தலைவர்களே சுதந்திரப் போராட்டத்திற்கு அதிக பட்ச பங்களிப்பை வழங்கி னார்கள். எனினும் பண்டாநாயக்கவின் சிங்கள மொழி மட்டும் அமுலாக் கத்தினால் இரு இனங்களுக்கிடையிலான நம்பிக்கை தகர்ந்துவிட்டது. அதன் பின்னர் 83 கறுப்பு ஜுலையின் போது நிலைமை மிகவும் மோசமடைந்தது. 56-83 காலப்பகுதியில் சிங்கள பெரும்பான்மையினத்தவர் தம்மை தமிழர்கள் எளிதில் மறந்துவிட முடியாதளவுக்கு சிறுமைப்படுத்தினர். அவர்கள் விவசாயத்தை முதன்மையாகக் கொண்டு தன்னிறைவு பெற்றுவாழ முயன்ற சமூகத்தினர். ஆழ் கிணற்றில் சிறுக சிறுக நீரைச் சேகரித்து விவசாயம் செய்து பிள்ளைகளுக்கு உயர் கல்வியை வழங்க கடினமான பணிகளை மேற்கொண்ட தமிழ் மக்களையே 50-60-70களில் வடக்கு கிழக்கல் நாம் சந்தித்தோம். ஆனால் அவ்வாறானவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே மாற்றுவதற்கு சிங்கள ஏகாதிப்பத்தியம் முயற்சித்தது.

83இல் 13 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்த ஏகாதிபத்தியத்தின் முக்கிய நிகழ்வாகியது. தெற்கில் அப்பாவி தமிழ் மக்களை அடக்குமுறைக்குட்படுத்தவும், கொலை செய்யவும் அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையிடவும் இந்த சம்பவத்தை சிங்களவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அப்பாவி தமிழ் மக்களை நடு வீதியில் வைத்து எரித்து கொலை செய்ததன் ஊடாக இந்த வழக்கினை சிங்களவர்கள் தீர்த்துக்கொண்டனர். வடக்கில் வசிக்கும் தற்போதைய சந்ததியினருக்கு இச்சம்பவங் கள் அனைத்தும் சிங்களவர் கள் அனைவரும் பேய் இனத்தவர் என்ற உணர்வை ஏற்படுத்தாதிருக்கும் என்று கூற முடியுமா?

83 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யாழ்ப்பாணத்தில் அகதி முகாம்களில் மக்கள் வசித்துக் கொண்டிருக்கின்றனர். சிறு குழந்தைகளாக அகதி முகாம் வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைத்தவர்கள் இன்று இளம் வயதினர்களாகிவிட்டனர். இந்த நிலையில் தமக்கு ஏற்பட்ட அவல நிலை பற்றிய வெறுப்புணர்வு சிங்களவர்களிடம் திரும்பாமல் இருக்குமா? அன்று அகதி முகாம் வாழ்க்கை எனக்கு ஏற்பட்டிருந்திருந்தால் சிங்களவர்கள் பற்றி நான் என்ன நினைத் திருப்பேன்?

தமிழ் மக்களிடம் ஏற்பட் டுள்ள இந்த சிங்கள வெறுப்புணர்வு நிலையைப் போக்க நாம் ஆரம்பம் முதலே எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. எதிர் வரும் காலங்களில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. அதனாலேயே தமிழ் மக்கள் எம்மீது கடுமையான வெறுப்புணர்வைக் கொண்டிருக்கின்றார்கள்.

### தமிழ் மக்களிடம் சிங்கள எதிர்ப்புணர்வு இல்லை

சட்டத்தரணி

எஸ்.எல்.குணசேகர

எனது அனுபவத்தின் படி தமிழ் மக்களிடையே சிங்கள எதிர்ப்



புணர்வு இல்லை. வெருகலுக்கு அப்பால் இருக்கும் கடைசி சிங்கள கிராமம் மஹிந்தபுர. வெருகலில் வசிப்பவர்கள் மஹிந்தபுரவினூடாகவே சேருநுவரவுக்கு வரவேண்டும். மஹிந்தபுர கிராமத்தை புலிகள் தாக்கி அழித்தனர். சிங்களவர்கள் அவ்விடத்தில் சிறு குடிசைகளை அமைத்து வசித்துவந்தனர். வெருகலில் இருந்து வரும் தமிழ் மக்கள் புலிகளின் தாக்குதலுக்குள்ளான மஹிந்தபுரவில் சிங்கள மக்களின் குடிசைகளில் தங்கியிருந்து தேநீர், உணவருந்தி ஓய்வெடுத் துச் செல்வர். அந்த மக்களிடம் வெறுப்புணர்வு இருக்கின்றது என்று கூற முடியுமா?

புலிகளும் தமிழ் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் தமிழ் சிங்கள வெறுப்புணர்வு அதிகரித்து வருவதாக தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கின்றனர். புலிகள் இராணுவ நோக்கத்தை வெற்றிகொள்ள அவ்வாறு கூறுகின்றனர். தமிழ் கூட்டமைப்பினர் அதற்கு தேவையான கருத்தியல் சூழலை உருவாக்க வெறுப்புணர்வை எடுத்துக்காட்டுகின்றனர்.

நாம் நீதிமன்றங்களில் தமிழ் சட்டத்தரணிகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவது இல்லையா? நான் கனிஷ்ட சட்டத்தரணியாக பணியாற்றிய காலப் பகுதியில் சிரேஷ்ட தமிழ் சட்டத்தரணிகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றியிருக்கிறேன். அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்கிறேன் .எம் மத்தியில் சிங்கள, தமிழ் என்ற பேதம் இருக்கவில்லை. எம்மிடம் சேவைகளைப் பெற்றுக் கொள்ள தமிழ் மக்கள் எம்மை நாடி வருகின்றனர். அவ்வாறாயின் என்ன பிரச்சினை இருக்கின்றது.

56 சிங்கள மொழி அமுலாக்கச் சட்டம் 83 கறுப்பு ஜுலை சம்பவங்கள் என்பவற்றை தற்போது தமிழ் மக்கள் மறந்துவிட்டனர். மொழி அமுலாக்க விடயத்தில் இருபத்து நான்கு மணிநேரம் என்ற விடயத்தை பெரிதாக பிரசாரப்படுத்தியிருக்காது விட்டால் அந்தப் பிரச்சினை அவ்வளவு தீவிரம் பெற்றிருக்காது.

நாம் உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அந் நாட்டில் வியட்நாம்மொழி ,யப்பான் மொழி, சிவப்பிந்தியர் மற்றும் பல மொழிபேசும் மக்கள் இருக்கின்றனர். ஆனால் அங்கு அரச கரும மொழி ஆங்கிலம். அந்நாட்டுக்குரித்தானவர்களான சிவப்பிந்தியர்களுக்குக் கூட தமது மொழியில் கருமங்களை மேற்கொள்ள அங்கு சந்தர்ப்பம் இல்லை.ஆனால் தமிழ் மக்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் அல்லாவிட்டாலும் அ வர்களுக்கு தமது மொழியில் கருமமாற்ற சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பண்டாரநாயக்க கடுமையான முறையில் மொழி அமுலாக்க நடவடிக்கையை மேற்கொண்டது தவறாகும். அவர் பின்பற்றிய முறை பிற இனத்தவரை தோற்கடிக்கும் தன்மையைக்கொண்டது.

### தமிழ் உணர்வுக்கு சிங்களவர்கள் மதிப்பளிக்கவில்லை


யோகி - பியசிறி குலரத்ன

பிரபாகரன் யுத்தத்தை நிறுத்த மாட்டார் என்றே நாம் கூறுகின்றோம். ஆனால் பலம்வாய்ந்த பெரும்பான்மையினம் என்ற தரப்பாக நாம் இந்தப் பிரச்சினை தொடர்பில் திறந்த கொள்கையை இதுவரை பின்பற்றவில்லை. இதனால் தமிழ் மக்கள் எம் மீது நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை.

யுத்தத்தை விரும்பாத தமிழ் மக்களைக் கூட எமது பக்கம் திருப்பிக் கொள்ள ஸ்திரமான அரசியல் நடைமுறை இதுவரை சிங்களத்தரப்பில் இருந்து முன்வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக தமிழ் மக்களின் சந்தேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நாம் கட்சி என்ற அடிப்படையில் முன்வைத்திருக்கின்றோம். இது ஒரு விடயம் .

இரண்டாவதாக தற்போது ஆட்

(6 ஆம் பக்கம் பார்க்க)



தரிசனம் 09 வலம்புரி

# சிங்கள மக்களின் தமிழர் மீதான எதிர்ப்பு

## பண்பாடான சிங்கள மக்களிடையே தமிழின துவேஷம் இல்லை

நயினை, ஆ.தியாகராஜா

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)

தமிழ் மக்கள் பற்றிய தப்பபிப் பிராயங்களே சிங்கள மக்களுக் கும்



தமிழ் மக்களுக்குமிடையிலான பகைமைக்கு காரணமாயிற்று. தமிழர்கள் சிங்கள இனத்திற்கு எதிரானவர்கள் என்ற தோற்றப் பாட்டை தென்பகுதி அரசியல்வாதிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

உண்மைநிலையைக்கண்டறிய முற்படாத சிங்கள மக்கள் தமது அரசியல் தலைவர்கள் கூறுவதை வேதவாக்காக எடுத்துக் கொண் டனர்.

இதனால் காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் மீதான வன்செயல் கள் தென்பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டன.பண்பாடானபௌத்த மதக் கொள்கையைக் கடைப்பிடிக் கும் சிங்கள மக்களிடம் தமிழின துவேஷம் ஏற்பட்டிருக்கவில்லை.

இந்த அடிப்படையில் நோக் கும்போது புரிந்துணர்வற்ற நிலையிலேயே சிங்கள மக்கள் தமிழ் மக் களுக்கு எதிரான போக்கைக்கொண் டிருந்தனர் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

ஆனால் சிங்கள மக்கள் தொடர் பில் தமிழ்த் தலைவர்கள் சந்தேக மோ! எதிர்ப்போ! கொண்டிருக்க வில்லை.

1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிங் கள- முஸ்லிம் இனக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற் காக சேர் பொன் .இராமநாதன் பிரிட் டனுக்குச் சென்றார்.

அவரின் பிரிட்டிஷ் பயணம் இன மோதலுக்கு முடிவுகட்ட அவருக் கான நன்றியை சிங்கள மக்கள் விமரிசையாக வெளிப்படுத்தினர்.

சிங்களத் தலைமைகள் மீதும் சிங்கள மக்கள் மீதும் சந்தேகமும் வெறுப்பும் சேர் பொன். இராமநாத னுக்கு ஏற்பட்டிருக்குமாயின் சிங் கள -முஸ்லிம் கலவரத்தை தடுப் பதற்கான அவரின் பிரிட்டிஷ் பய ணத்தின் முடிவு தமிழருக்கான தனி நாடாகவே இருந்திருக்கும்.

ஆனால் இலங்கையில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ லாம் என்ற கருத்தியல் தமிழ்த் தலைவர்களிடம் இருந்த காரணத்தினாலேயே 1948 இல் சுதந்திரம் வழங்கிய போது அதனைத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. சிங்கள மக்கள்மீது தமிழர்கள்கொண்டிருந்த அப்பளுக்கற்ற நம்பிக்கையை சிங் களத் தலைமைகள் இம்மியும் எண் ணிப்பார்க்க மறந்து விட்டன.

தமிழர்கள், சிங்களவர்களுக்கு-பௌத்தத்திற்கு-பெரும்பான்மையின அரசுக்கு எதிரானவர்கள் என்ற கருத்தை ஏதுமறியாத சிங்கள மக் களின் மனங்களில் அவர்கள் பதிய வைத்தனர்.

1987களின் முற்பகுதியில் வவுனியா பௌத்த விகாராதிபதியின் தலைமையில் வவுனியா சமாதானக் குழு பூசாவிலுள்ள கைதி களைப் பார்ப்பதற்காக சென்றது. அந்தக் குழுவில் நானும் இடம்பெற்றிருந்தேன்.

பூசாவுக்குச் செல்வதற்கு முன்னதாக காலியில் உள்ள பௌத்த விகாரையில் தங்கநேரிட்டது. அப்போது அந்த பௌத்த விகாரை யின் பீடாதிபதி ''நயினாதீவு உட்பட யாழ். குடாநாட்டில் உள்ள பௌத்த விகாரைகள் எல்லாம் உடைத்து நொருக் கப்பட்டு விட்டதாமே'' என்று கேட்டார்.

அதற்கு அப்படி எதுவும் நடைபெறவில்லையென நான் எடுத் துக் கூறினேன். அதுவரை விகாரைகள் உடைக்கப்பட்டு விட்டதாகவே 83 வயது நிரம்பிய அந்த விகாராதிபதி நம்பிக்கொண்டிருந்தார்.

இப்படித் தான் தமிழர்களுக்கு எதிரான வதந்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இதற்கு இனவாத ஊடகங்களின் உதவியும் தாராளமாக இருந்ததென்பதை மறுத்து விடமுடியாது.

களனிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் தெமட்டக் கொட விகாராதிபதியாகவும் இருக் கும் சீவொளி தேரரும் நானும் நயி னாதீவில் ஒரே பாடசாலையில் படித் தோம். அவர் தமிழ் மக்களைப் பற்றி நன்குணர்ந்தவர். அவரிடம் தமிழர் கள் தொடர்பில் எந்த எதிர்ப்பும் கிடை யாது.

ஆக, தமிழ் மக்கள் பற்றிய - அவர்களின் வரலாற்றை தெரி யாத சிங்கள மக்களிடமே இனவாத அர சியல்வாதிகளின் பருப்பு அவிந்து போயுள்ளது.

தமிழின விரோத நடவடிக் கையை அரசியல்வாதிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதன் காரணமாகவே சிங்கள மக்கள் தொடர்பில் தமிழர்களி டையே எதிர்ப்பு பற்றிக் கொண் டது எனலாம்.


## சந்தேகமும் போட்டியும் எதிர்ப்பை ஏற்படுத்தின

ரி.சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர்)

இலங்கை சுதந்திரமடைந்த போது நாட்டிலுள்ள பெரும்பா லான திணைக்களங்களில் அமைச் சுகளில் தமிழர்களே அதிஉயர் பத விகளை வகித்தனர். அதற்கு அவர் களின் கல்வி நிலையும், ஆங்கில மொழி அறிவும் வழிவகுத்தன. அதேநேரம், தமிழ் மாணவர்கள் கல்வியில் உயர்ந்த பெறுபேறு களைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிகளைத் தமதாக்கிக் கொண்டனர்.

இங்குதான் சிங்களத் தலைமைகளிடமும், சிங்கள மக்களிடமும் ஓர் அச்சநிலை தோற்றம் பெற்றது. அதாவது தமிழர்களின் கல்வி அறிவு, அவர்களின் முன்னேற்றம், பதவிநிலை என்பன எதிர் காலத்தில் சிங்கள மக்களின் ஆட்சியுரிமைக்கும், பெரும்பான் மைக்கும் ஆபத்தாகுமென்ற நினைப்பை



உருவாக்கியது.

எதுவித நியாயமும் ஆதாரமுமற்ற தமிழ்மக்கள் மீதான சந்தேகம்-போட்டி- பொறாமையே தமிழ் மக்களை ஓரங்கட்ட வேண்டுமென்ற உணர்வை சிங்களத் தலைமைகளிடையே ஏற்படுத்தியது. இதற்காக பல்கலைக்கழக அனுமதி முதல் வேலைவாய்ப்பு வழங்குவது வரை தமிழர்களை மட்டுப்படுத்தும் திட்டம் அரங்கேற்றப்பட்டது.

கல்வியைத் தமது மூலதனமாகக் கொண்ட தமிழ் மாணவர்களிடையே சிங்களத் தலைமைகளின் முடிவுகள்-தீர்மானங்கள்-தரப்படுத்தல்கள் பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணின. தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைகிறார்களென்றால் அது கண்டு மகிழ் வடைய வேண்டிய ஆட்சியாளர் கள் அதற்கு மாறாக தமிழ் மாண வர்களின் கல்விக்கு குழிவெட்டி னார்கள்.

சிங்கள மாணவர்களை ஊக் கப்படுத்துவதை விடுத்து, பெரும் பான்மை, சிறுபான்மை என்ற விகிதாசாரக் கணக்கை முன்னி லைப்படுத்தி குறைந்த கல்விப் பெறுபேறுகளை உடைய சிங்கள மாணவர்களை பல்லக்கில் ஏற்றி பல்கலைக்கழகம் அனுப்பிவைத் தனர். ஆனால் அதேநேரம் அதி கூடிய பெறுபேற்றைக் கொண்ட தமிழ் மாணவர்கள், "தமிழர்" என்ற இனப்பிரிவால் வீதியில் நிறுத்தப் பட்டனர். இது விதியல்ல. திட்டமிடப் பட்ட சதி. அதுவே சிங்களவர்கள் மீதான எதிர்ப்பு நிலையை தமிழர் களிடையே விதைத்தும் விளைவித் தும் உள்ளது.

## சுயநலம் கருதிய விதைப்பு

மு.விக்னேஸ்வரன்

(அதிபர்)

மனிதன் பிறக்கும்போது சுதந் திரமாக பிறக்கிறான். ஆனால் எங்கு பார்த்தாலும் அடிமை என்ற விலங் கினால் கட்டப்பட்டுக் கிடக்கிறான். மனிதனை மனிதன் மதிக்கத் தவறியமையே இதற்கான தாற்பரிய மாகும். இந்நிலை இலங்கை வரலாற்றுக்கும் சாலப் பொருந்தும்.

இந்நாட்டில் சிங்களவர், தமி ழர், முஸ்லிம் என்ற மூவினத்த வர்களே வாழ்ந்து வருகின்றனர். எனினும் சிறுபான்மையோராகிய தமிழரை பெரும்பான்மை யோரா கிய சிங்கள மக்கள் மதிக்கத் தவறியமையும் தவறி வருகின்றமையும் சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல.

இந் நிலையில் சிங்கள மக் கள் மத்தியில் வரலாற்றுக்காலம் தொடக் கம் தமிழர் எதிர்ப்பு மனோபாவம் தானாகத் தோன்றியது எனக் கூற முடியாது.

மாறாகத் துறைசார்ந்த பலரால் விதைக்கப்பட்டது என்பதே பொருத் தமானது. இவ் விதை நச்சு விதை யாக-பாதீனியம் செடி போலப் பர வியமை வருந்தத்தக்கது. இத னால் நன்மை தீமையறியாத பலர் இச் செடிகளில் மோதிக் கொண்டனர். தம்மை அறியாமலே இவ் விதை களை தம்முடன் சேர்த்துக்கொண் டனர். தமது தோற்றப்பாடுகளுக்கும் சுயநல வாழ்வியலின் நிலைப்பாட் டிற்கும் இதை ஊன்றுகோலாக்கிக் கொண்டனர் என்பதே உண்மை.

இது தமிழர் எதிர்ப்பு மனோ



பாவத்துக்கு தூபமிடுவதாக அமைந் தது. எனவே இந்நிலை நிச்ச யமாக மாற்றப்பட வேண்டும்.

இது தான் சமாதானத்துக் கான முதற்படி. தமிழ் மக்களும் இந் நாட்டின் பிரஜைகள் தான் என்பதை வரலாற்றைப் புரட்டி அங்கீகரிக்க வேண்டும். அதன் போதே சொத்து இழப்புக்கள், உயிரிழப்புகள் என் பவற்றை முடிவுக்குக்கொண்டு வரு வதுடன் தமிழ் மக்களின் சுயாதீன மான வாழ்வுக்கு அடிகோல முடியும்.

## வடக்கின் கருத்து

**சந்திப்பு:- என்.விஜயசுந்தரம்**

எமது நாட்டின் தீராத தொழு நோயாகவும் சாம்பலிலே நெருப்புப் போலவும் மாறாது காணப்படுகின்ற இனத்துவ எதிர்ப்பு மனோபாவம் மாற்றமடைய வேண்டும். அன்பு தான் இன்ப ஊற்று என்ற கௌத மபுத்தரின் மகுட வாக்கி யம் சிங்கள மக்களால் அங்கீகரிக்கப்பட வேண் டும்.

இதற்கு சிங்கள மக்கள் தயா ராகவிருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

## அரசியல்வாதிகள் விதைத்த நச்சு விதை எதிர்ப்புக்கு காரணமாயிற்று

லயன், தம்பிப்பிள்ளை சற்குணராசா

(யாழ்.மாவட்ட இணைப்பாளர், சர்வதேச லயன்ஸ் கழகம்)

ஆரம்ப கட்டத்தில் தமிழ் மக் கள் மீது சிங்கள மக்களோ சிங்கள மக்கள் மீது தமிழ் மக்களோ எது வித காழ்ப்புணர்வையும் கொண்




டிருக்கவில்லை. காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்தவர்களே இனவாத சிந்தனையை மக்கள் மத்தியில் விதைத்தனர். நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் இன ஒற்றுமை என்பவை தொடர்பில் பிரசாரம் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதை விடுத்து, இலங்கை சிங்கள மக்க ளுக்குரியது. தமிழர்கள் வந்தேறு குடிகள் அவர் களை இந்த நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற பிரசாரமே செய்யப்பட்டது. அரசியல் வாதிகளின் இந்த நச்சு விதைப்பே இன்று தமிழ்-சிங்கள எதிர்ப்பிற்குக் காரணமாயிற்று.

தமிழ்-சிங்கள மக்களிடையே எதிர்ப்புணர்வை ஏற்படுத்துவத னூடாக அரசியல் பிழைப்பு நடத்த முற்பட்டவர்களின் கோஷத் தை சிங்கள மக்களும் அப்படியே உள் வாங்கிக் கொண்டனர்.

ஆட்சியைப் பிடிக்கும் அரசி யல்வாதிகளின் கபடத்தனத்தை உணராத சிங்கள மக்கள் காலத் திற்குக் காலம் தமிழ் மக்கள் மீது இனக் கலவரம் தொடுத்தனர். இதன் முடி வாக, சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது. அவர்கள் எம்மை எதிர்ப்பவர்களாகவே இருப்பார்கள் என்ற நினைப்பு தமிழ் மக்களின் மனதில் அசையாத இடத்தைப் பிடித் துக்கொண்டது.

அதேவேளை காலத்திற்குக் காலம் தென்பகுதியில் உயிர்ப்பெடுக் கும் அரசியல் கட்சிகளின் நிலை பேறுக்கான ஆதாரமாக இனவாதமே, சமைக்கப்பட்டது. தமிழ் மக்களை எத்துணை தூரம் எதிர்க்க முடி யுமோ அந்தளவிற்கு சிங்கள மக்களின் வாக்குப் பலத்தை தம் பக்கம் வசப் படுத்த முடியுமென அந்தக் கட்சிகள் கருதின. இவற்றின் காரணமாகவே சிங்கள மக்கள் என்றால் அவர்கள் தமிழர்களின் எதிர்ப்பாளர்கள் என்ற உணர்நிலை ஏற்பட்டது எனலாம்.



# தரிசனம்


வலம்புரி

# இனங்களுக்கிடையேயான நட்புறவு

, இனங்களுக்கிடையே நட்புறவைக் கட்டியெழுப்பு வதற்காகக் கிடைத்த நீண்டகால சந்தர்ப்பத்தை இழந்து விட்டோம்.

நட்புறவுக்காகக் கிடைத்த பெரும்பாலான காலப்பகுதியில் பகைமையே வளர்க்கப்பட்டுள்ளது. இப்போது இனங்களுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் சொற்பமானதாயினும் அதை தகுந்த முறையில் பயன்படுத்துவோமாயின் அதனால் இன யுத்தத்திற்கு முடிவுகட்டி, அனைத்து இனங்களும் சகல உரிமைகளுடனும் ஒற்றமையாக வாழமுடியும்.

எனினும் இன ஒற்றுமை பற்றிய சிந்தனைக்கான நேர



ஒதுக்கீடுகள் எதுவுமேயில்லை என்று கூறலாம். ஆயுதக் கொள்வனவு, ஆக்கிரமிப்பு, சட்டவிரோதக் குடியேற்றம் என எல்லா முமே, இனத்துவ மோதலை ஊக்குவிக்கும் கட்டுமானங்களாகக் காட்சி தருகின்றன. 2002ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன் படிக்கைக்குப் பின்னர் தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பும் பணியில் தீவிரம் காட்டின. அவர்களின் முயற்சிகள் வட பகுதி மாணவர்கள் தென்பகுதி மாணவர்களுடன் கலந்துரையாடுவதிலும் ஊடக வியலாளர்களின் ஒன்று கூடலிலும், கிராமிய சமூக தலை மைகள் தங்கள் பணிகளைப் பரிமாறிக் கொள்வதிலும் இருந்து ஆரம்பிக்கப்பட்டன. எனினும் கட்டப்பட்ட உறவுப் பாலம் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாமல் உடைந்து போனது.

இனங்களுக்கிடையேயான உறவைபலப்படுத்துவதற்கு மூலகாரணமாக இருந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலிழக்கும்போது, அதன் வழி வந்த 'உறவுப்பாலம்' நிலைக்குமென எவரும் எதிர்பார்க்க முடியாது.

## வடக்கின் கருத்துக்கள்

இதிலிருந்து நாம் ஒன்றைக் கற்றுக் கொள்ளமுடியும். அதாவது அமைதியான சூழ்நிலையின் அடித்தளத்தில் இருந்துதான் சமாதானம் - ஒற்றுமை உருவாகமுடியும். அமைதியான சூழ்நிலைக்குப் பங்கம் ஏற்படும்போது சமாதானம் தொடர்பில் - இன ஒற்றுமை தொடர்பில் எடுக்கப்படும் எந்த முயற்சியுமே வெற்றிதரமாட்டா.

இது அனுபவத்தின் முடிவு. யுத்தம் ஒருபுறம்-சமாதான முயற்சிகள் மறுபுறம் என்ற சித்தாந்தம் மேடைப் பேச்சுக்குரிய தேயன்றி அது நடைமுறைக்குச் சாத்தியமாகாது. அதுவே நடைமுறை என்றால் அங்கு இனஒற்றுமை பற்றிய பேச்சுக் கள் தேவையற்றவையாக மாறிவிடும். உதாரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஆரம்பத்தில் ஏற்பட்ட மெல்லிய கீறல்கள்-மீறல்கள் இன்று எத்துணை தூரம் விரிவடைந் துள்ளதென்பதை அனுபவ ரீதியாக உணரமுடியும்.

யுத்த நிறுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் நாட்டின் எந்தப் பகுதிக்கும் எவரும் செல்லலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது தென்பகுதியில் உள்ள வடக்கு கிழக்குத் தமிழர்களை வெளியேற்றும் சூழ்நிலை தோற்றம் பெற்றுள்ளது. படையினர் ஏற்றுக்கொள்ளக் கூடியதான காரணமின்றி வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தென்பகுதியில் தங்க முடியாதென்பது எந்தளவில் நியாயமானது. அதன் மூலம் இன ஒற்றுமை ஏற்படும் வாய்ப்பு உருவாகுமா? இதுபற்றி உரியவர்கள் சிந்தித்தாக வேண்டும்.

இதற்கு அப்பால், தமிழ்-சிங்கள மக்களிடையே ஏற்பட்ட எதிர்ப்புணர்வுக்குப் பரிகாரம் தேடுவதும் இனங்களுக்கிடையே நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறையாக இருக்கும். அதாவது நாடு சுதந்திரமடைந்த காலப் பகுதியிலிருந்து பாடப் புத்தகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட வரலாற்று திரிபுகள், தமிழ் மக்களை சிங்கள மக்கள் வெறுப்புடன் பார்ப்பதற்கு வழி வகுத்தது. இந் நிலைமையின் வெளிப்பாடே இன்றைய இனயுத்தத்தின் உச்சப்படுத்தலாகும்.

இதிலிருந்து சிங்கள சமூகத்தை ஆற்றுப்படுத்துவது வரலாற்றைத் திரிபுபடுத்திய சிங்களக் புத்திஜீவிகளிடமே உண்டு. வரலாற்றுத் திரிபுகளை நீக்க வேண்டுமென்ற கருத்து சமாதான விரும்பிகளி டம் மேலெழுந்த போதிலும், அவர்களின் கருத்தியல் பாடநூல்களில் மூவினப் பாத்திரங்களை இடம்பெறச் செய்வதனூடாக முடிவுறுத்தப்பட்டதேயன்றி, வரலாற்றின் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படவில்லை.

உதாரணமாக 1973களில் வெளி வந்த ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான 'தாய்மொழி' பாடல் நூலில் நிமால் பந்தையடி, பாலா பந்தைப்பிடி என்றவாறு இனத்துவப் பங்களிப்பு காட்டப்பட்டது.

சின்னத்தம்பி பத்மராஜா, M.Phil.
ஆசிரியர்

உண்மையில் இங்கு இனத்துவப் பாத்திரங்களில் போட்டித் தன்மை அவற்றின் பெயர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டனவேயன்றி அங்கு இன ஒற்றுமைப்படுத்தல் வெளிப்படுத்தப்படவில்லை. இன ஒற்றுமைப்படுத்தல் வலியுறுத்தப்படுவதாக இருந்தாலும் நிமாலும், பாலாவும் சேர்ந்தே பந்தை பிடியுங்கள் என்றே அந்தப் பாடநூலில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆக இனங்களுக்கிடையேயான நட்புறவென்பது, நட்புறவை எந்தெந்த விடயங்கள் ஆழமாக அமிழ்த்திவிட்டனவோ அவை களைப்படுவதன் மூலமாக மீட்டெடுக்கப் படக்கூடியதாகும்.

இன ஒற்றுமை அவசியம் என்ற உணர்வு மனங்களில் வலிமையடைவதும், இதற்காக இன்றே இப்போதே சிறுவர்களிடத்தே இன ஒற்றுமையின் வலிமைப்பாட்டின் தேவை உணர்த்தப்படுவதும் அவசியமாகும். அந்தப் பணியில் எந்த அப்பளுக்கும் எவரிடமும் இருக்கலாகாது.

## ஆசிரியர் குறிப்பு

விட்ட தவறுகளை மீட்டுப் பார்ப்பது கூட, தவறுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான வழியாக இருக்கும். சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை , சிங்கள இளந் தலைமுறையினருக்கு அறியப்படுத்துவதன் மூலமாகவே நீண்டகாலமாக இலங்கை மண்ணில் புரையோடியிருக்கும் இனவன்மத்தை வேரறுக்க முடியும்.

இன ஒற்றுமைப்படுத்தலுக்கான காலம் கடந்து விட்டதென்னும் உண்மைக் கருத்து ஏற்புடையதாயினும், இன ஒற்றுமையின் அவசியப்பாடு கனிந்திருக்கும் இவ் வேளையிலாவது, அதுபற்றிப் பேசுவது, எதிர்காலத்தில் மேலும் வீச்சுப்பெற இருக்கும் இனவாதச் சூறாவளியைத் தடுப்பதற்கு உதவுவதாக அமையும்.

அதிலும் சிங்களத் தலைமைகள் விட்ட வரலாற்றுத் தவறுகளை சிங்கள மக்கள் - புத்தி ஜீவிகள் எடுத்துக் கூறும் போது அதனால் ஏற்படக்கூடிய வெளிவாரி விளைவு சமாதானத்திற்கு - இன ஒற்றுமைக்கு நேர்க்கணியமாக அமையும் என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.


கருத்தியல் வாதங்கள் இந்நாட்டில் அமைதியையும், சம உரிமையையும் ஏற்படுத் துவதாக இருப்பதுடன் மனித வாழ்விற்கான பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உதவுவதாகவும் இருக்க வேண் டும். குறிப்பாக இன ஒற்றுமையை வேரறுத்து அதனை குடிநீராகப் பருகி , பதவி எனும் நோய்க்குப் பரிகாரம் காணும் பாதகக் கூட்டத்திலிருந்து அப்பாவிச் சிங்கள மக்களை மீட்டெடுப்பதன் ஊடாகவே, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் இன ஒற்றுமையை - சமாதானத்தை - சக வாழ்வை எட்ட முடியும்.



## ஓ! யாழ்ப்பாண தேசமே

ஓ! யாழ்ப்பாண தேசமே
உன் அழகிய வதனம்
செம்புள்ளி கரும்புள்ளி குத்தப்பட்டு
விகாரமாய் மாறியது ஏன்?
உயிர்த்துடிப்பு அடங்கிய பிணம் போல
உணர்ச்சிகளை நீ
ஒழித்துக்கொண்டது எதற்காக?
தென்னஞ்சோலைகளும் பனைமரக் காடுகளும்
மாந்தோப்புகளும் இழந்த நிலையிலா இங்கே
சனநாயகக் குயில்கள் கூவவில்லை
இளங்காலைப்பொழுதும் இளவேனிற் காற்றும்
மணம் வீசும் மல்லிகையும் மயக்கும் தோடிராகமும்
இனிமைதரவில்லை என்பதனாலா
தவழ்ந்துவரும் குழந்தையைக்கூட அள்ளி முத்தமிட
மனம் மறுத்து மரத்துப் போய்க்கிடக்கிறது
முட்கம்பி வேலிக்குள்ளும் அடுக்கிய மணல் மூடைக்குள்ளும்
முடங்கிக் கிடந்து கிடந்து முதுகு கூனாகிப் போனதனாலா
மானுடத்தின் விழிகளும் குரல்வளைகளும்
மனச்சாட்சியைத் திறக்க மறுக்கின்றன
மளிகைச் சாமான்களுக்கும் மனிதத் தலைகளுக்குமிடையே
நடந்த 'காணாமற்போதல்' போட்டியில் பாவம்
அஃறிணைப் பொருட்கள் தோல்வி காணுகின்றன
ஈரம் கசிந்த இதயங்களை இழந்ததனாலா மனிதர்கள்
தொண்டைக்குழி தொடக்கித் தொடர்ச்சியாக
வயிறைப் படைத்தவராக வாழத்தொடங்கிவிட்டனர்
இனவாத மதவாதக் குழந்தைகளைப் பிரசவிக்கவென்றே
கர்ப்பம் தரிக்கின்ற பத்திரிகைத் தாய்மார்
நாட்டில் பலரிருப்பதனாலா இங்கே
ஊனமுற்ற குழந்தைகள் கூடத்
துண்டுபிரசுரமாய் தொலைந்துபோகின்றன
வண்டுகள் போலக் காமாளை வயிற்றுடன்
வாடும் குழந்தைகளின் வறுமைப்பசி நீங்கிடப்
குண்டுகள் போடும் குதூகலத் தாலாட்டும்
அவர்களை உறங்க வைக்கமுடியவில்லை
நேர்த்திகளைக்கூட நிறைவேற்ற முடியாமல்
கடவுளர்கள் கூடக் கற்பூரத்துக்காகக் கியூவில்
கால்கடுக்க நிற்கின்றனர்
தம்மபத சிகதீபக்கருக்கு வெள்ளம் பொங்குவதால்
சிங்களப் பொங்கலில் செந்தமிழ்ப் பயறு
சேர்ந்து வேகும் தேசியம் தொலைந்துவிட்டது
ஓ! யாழ்ப்பாண தேசமே! ஓ! யாழ்ப்பாண தேசமே!

கலாநிதி செ. திருநாவுக்கரசு



# தரிசனம்

ராவய

# இனங்களுக்கிடையேயான நட்புறவு

சிங்கள, தமிழ் நட்புறவைக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்ற கேள்வியை எவராவது கேட்பாராயின் அது அரசியல் சார்ந்த கேள்வியாக அமையாது. இந்தக் கேள்வியை 10-15 வருடங்களுக்கு முன்பு கேட்டிருந்தால் அதில் ஓர் அடிப்படை



இருந்திருக்கும். தேசிய நெருக்கடிக்கு கடந்த காலங்களில் எந்த வொரு நீதியான நடவடிக்கை கள் எதனையும் முன்னெடுக் காமல் தற்போது இனங்க ளுக்கிடையிலான நம் பிக்கை நிலையை தகர்க் கும் விதத்திலான விட யங்கள் இடம்பெறும் போது அவர்களுக்கிடை யில் நம்பகத் தன்மை யைக் கட்டியெழுப்புவது பற்றி பேசுவது மிகவும் கடினமான காரியமாகும்.

அரசியல் தீர்வு குறித்து அரசாங்கம் முன்வைத்திருக்கும் யோசனைகள் அதற்கு சிறந்த உதாரணமாகும். மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்டு மீண்டும் அதற்கு அப் பால் சென்று வடக்கு கிழக்கினை இணைக்க நேர்ந்தது. இறுதியில் தற்போது மாவட்ட மட்ட அதிகாரப் பகிர்வினை நோக்கி முழு சமூகத்தையும் தள்ளும் நிலையை அவதானிக்க முடிகின் றது. இந்த நிலைமையில் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாது.

மறுபுறம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான குழுவினரான ஆனந்த சங்கரி, டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணா தரப்பினரும் இந்த யோசனை

## தெற்கின் கருத்து

களை நிராகரிக்கின்றனர். பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் பேராசிரியர் விஷ்வ வர்ணபால ஆகியோரின் யோசனைகளையும் நிராகரித்து விட்டு மாவட்ட சபைகளை தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்திருப்பது எவ்வளவு மோசமான நிலைமை

முக்கியத்துவம் வாய்ந்த தீர்வுகளை நிராகரித்துவிட்டு அர சாங்கம், ஜே.வி.பியினதும் சிஹல உறுமயவினதும் யோச னைகளான ஒற்றையாட்சி தீர்வினையே முன்வைத்துள் ளது. இந்த சூழலில் தமிழ் மக்களின் நம்பகத் தன்மையை வென்றெடுப்பது பற்றி எவ்வாறு பேச முடியும்? தமிழ் மக்க ளுக்கு தீர்வினையோ உரிமைகளையோ அரசாங்கம் வழங் கும் என்பது வெறும் மாயை என்றே அரசாங்கத்தின் இந்த நட வடிவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

தமிழ் போராட்டத்தை அடக்கி ஒடுங்கிவிட்டு ஒற்றையாட்சி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபித்து சிங்கள அதிகாரத்தை உறுதிப்படுத்திய தரப்பினர் நாமே பெருமையை சிங்கள சமூகத்தினரிடையே தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கை யினூடாக எதிர்கால அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வது அவர்களின் இலக்காகும். முப்படையினரும் தீவிரமாக யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டு மும்முனைத் தாக் குதல்களை நடத்திக் கொண்டிருக்கும் போது சமாதான இயக் கம் தொடர்பான அரசாங்கத்தின் யோசனைகள் பயனற்ற செயல்ாகவே அமைகின்றன. இந்த நிலையில் புலிகளின் தனி நாடு என்ற கோரிக்கையே இங்கு முன்னணி இடத்தைப் பெறும்.

### கீழ் மட்டம்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்ன என்பது குறித்து சிங்கள மக்களிடையே கலந்துரையாடலை ஏற்படுத்துவதே இந்த மோசமான சூழ்நிலையில் நாம் கீழ்மட்டத்திலிருந்து மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையாகும். இப்பிரச்சினை களைத் தெளிவாகப் புரிந்துகொண்ட எவரும் இனவாத ரீதி யில் இவ்விடயத்தை அணுக மாட்டார்கள். அரச சார்பற்ற நிறு வனங்களுக்கு இது குறித்து ஆழமான நீண்டகால யோச னைகள் எதுவும் இல்லாவிட்டாலும் இந்த கீழ்மட்டப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல அவர்களின் தலை யீடு அவசியமாகும். சிறு குழுக்களாக தேசிய பிரச்சினைக்கு காரணமாக உள்ள விடயங்களையும் அவற்றை தீர்க்கும் வழிகள் குறித்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்வது எமக்குள்ள மாற்று வழியாகக் கொள்ள முடியும். புரிந்துணர் வின் அடிப்படையிலேயே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடி யும். எனினும் பௌத்த மத குருமார்கள் இனவாதத்தினால் போஷிக்கப்படுகின்ற நிலையில் அவர்கள் மத்தியில் கூட இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளும் தன்மை இல்லை. தேசியப் பிரச்சினை குறித்து சிறந்த கருத்துக்க ளைக் கொண்டிருந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்கு பற்றி என் நினைவுக்கு வருகின்றது. அதே போன்று அண்மையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மகாதி வுல்வெவ நந்தரத்ன தேரர் அவ்வாறானதொரு பௌத்த பிக்கு என்றே கூறவேண்டும். எனினும் கொழும்பு மற்றும் கொழும்பு உப நகரங்களைச் சேர்ந்த மகா சங்கத்தினர் இந்த நடவடிக்கைகளில் தலையீடுகளை மேற்கொள்வதே கிடை யாது.

### ஊடகம்

ஊடகங்களினால் இனங்களுக்கிடையில் நட்புறவைக் கட்டியெழுப்புவது தொடர்பில் பாரிய பங்காற்ற முடியும். எனினும் இந்தப் பணி ஓரளவுக்கே நடைபெறுகின்றது. முதலில் அவர்கள் நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து உண்மைகளை செய்தியாக்கம் செய்ய வேண்டும். குறுகிய அரசியல் நலன்களுக்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது சிறந்ததல்ல. நீண்டகால அடிப்படையில் இனங்களுக் கிடை யில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடியவாறான ஆய்வு ரீதியான ஊடகப் பணிகளில் ஈடுபடுவதனை ஊடகவியலா ளர்கள் தமது கடமைகளில் ஒன்றாக மாற்றிக்கொள்வது அவசியமாகும்.

### புத்திஜீவிகள்

அரசியல் குறித்தும் ,முரண்பாடுகளைத் தீர்ப்பது குறித் தும் கருத்துக்களை வெளியிடும் இந்நாட்டு புத்திஜீவிகள் இனவாதக் கருத்துக்களில் மூழ்கியிருப்பதனை அவதானிக் கக் கூடியதாகவுள்ளது. மேலும் சிலர் சமஷ்டி மற்றும் ஈழ அடிப் படைவாதத்தில் சிக்கியிருக்கின்றனர். இந்த நிலைப்பாடுக ளும் மக்கள் மத்தியில் சந்தேக நிலையையே ஏற்படுத்துகின் றது. இதனால் புத்திஜீவிகள் அடிப்படை வாதத்திலிருந்து மீண்டு தேசியப் பிரச்சினை குறித்து நடு நிலையான ஆய்வு

தியச குழுவின்

**பெட்றிக் பெர்ணாந்து**

களை மேற்கொள்வதினூடாக இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுத் தன்மையை அதிகரிக்க முடியும்.

### இடதுசாரி இயக்கங்கள்

1956ல் மொழிப் பிரச்சினை ஏற்பட்டபோது சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் தமிழ் எழுத்துக்கள் கொண்ட பெயர்ப் பல கைகளுக்கு தார்ப்பூச்சுக்களை நடத்தும் போது சம சமாஜக் கட்சியின் இளம் செயற்பாட்டாளர்கள் மண்ணெண் ணெய் போத்தல்களை மறைத்து வைத்து தார்ப்பூச்சுகளை அழித் துக் கொண்டிருந்தனர். தமிழ் விரோத செயற்பாட்டிற்கு ஜன நாயக ரீதியில் அமைதி வழியில் எதிர்ப்புத் தெரிவிக்கும் நட வடிக்கையாகவே அது அமைகின்றது. நானும் அங்கம் வகிக் கும் இடதுசாரி இயக்கத்திற்கு தற்போது அவ்வாறான ஞானம் இல்லை. இளைஞர்களின் பலமும் இல்லை. நாம் அவ்வா றான கீழ்மட்ட இயக்கங்களைக் கட்டியெழுப்பாதது மிகவும் மோசமான் குறைபாடாகும்.

(03ஆம் பக்கத் தொடர்ச்சி...)



சியை பரிசீலித்துப் பார்த்தால் தமிழ் மக்களுக்கு ஓரளவு நீதியை பெற்றுக் கொடுப் பதாக தங்களைத் தாங்களே ஆட்சியாளர்கள் ஏமாற்றிக்கொள்கின்றனர்.

புலிகளையும் தமிழ் மக்களையும் வேறுபடுத்தும் முயற்சியானது நாம் மாயையில் அகப்பட்டுள்ளோம் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

நாம் அனுபவிக்கும் அழுத்தங்களில் இருந்து தம்மை விடுவிக்கும் சக்தியாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை கருதினால் அது குறித்து நாம் ஆச்சரியப்படக்கூடாது. தமிழ் மக்கள் இந்த யுத்தம் குறித்த உணர்வு பூர்மான நிலையில் இருக்கின்றனர்.

அதற்கு ஏற்றவாறான பதில் எந்தவெரு சிங்களக் கட்சிகளிடமிருந்தும் வெளியாக வில்லை. இங்கு நாம் மகாத்மாகாந்தி வரை பயணிக்கவேண்டும். இல்லாவிட்டால் என் றுமே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாது. நம்பகத்தன்மையை வென் றெடுத்தாலே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். இல்லாவிடின் நாம் முன்வைக் கும் எந்தவொரு யோசனையிலும் பயன்கிட்டாது.


பிரபாகரன் மஹிந்தவை நேரடியாக சந்திப்பது வரை இந்த விடயம் செல்ல வேண் டும் என்றே நான் கருதுகின்றேன். இரு தரப்பிலும் மக்கள் இறப்பதைத் தடுத்து இரு தரப்பு தலைவர்களும் நேரடியாக சந்தித்து பிரச்சினைகள் புற்றி கலந் துரையாட நட வடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு திறந்த கொள்கையைப் பின்பற்றாமல் இராணுவத்தினதும் பொலிஸாரினதும் முக்கியமற்ற பிரதிநிதிகளை அனுப்பி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை. மண்டேலா -கிளார்க் பின்பற்றிய அணுகுமுறை என்ன? அந்தக் கலந்துரையாடலை அனைவருமே எதிர்பார்த்திருந்தனர். அது வெறும் விவாதம் மட்டுமல்ல. இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம் என்று மண்டேலா தெரிவித்தார்.

ஆட்சியாளர்களுக்கிடையிலான நேரடியான தொடர்பாடலின் போது ஆட்சியாளர்கள் மன நிலை தெளிவாகத் தெரி யும். மனநிலை வெளிப்படும் அளவுக்கு மக்களின் ஐக்கியப்பாடும் நிவர்த்தியாகும்.

பிரபாகரன் - மஹிந்த நேரடி தொடர்பின்றி இந்தப் பிரச்சினைக்கு வேறு எவராலும் தீர்வு காணமுடியாது.

லெனின் கூறிய விடயம் ஒன்றை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்று தத்துவஞானி ஆட்சியாளராக வேண்டும் அல்லது ஆட்சியாளர் தத்துவஞானியாக மாறவேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறான பிரச்சினையைத் தீர்க்க முடியாது. மற்றவர் குறித்து நம்பகத்தன்மையையும் ஏற்படுத்த இயலாது.



## பருவ மாற்றம்

வடக்கைப் போன்று தெற்கை வெப்பத்தால் நீராட்டி
ஒரே மக்களாகக் கருதி அன்று தட்டி எழுப்பிய
அதே சூரியன் முன்னர் போன்று தலை உயர்த்துவது
இந்த இருளை மீள வராத இடத்தில் சிறை வைப்பதற்காக!

பனம்பூவின், தென்னம்பூவின் வேறுபாட்டை தேடிய மனது
பனங்கள்ளின் அடிச் சொட்டை தேடிய மனது
இன்று மனிதாபிமானத்தின் நறுமணத்தைத் தேடுகின்றது
வெடி மருந்துகளின் நாற்றத்தை போக்குவதற்காக!

சாரியும், ஒசரியும் -தாலியும் மாலையும்
புதுவருடமும், பொங்கலும்-பன்சலையும், கோவிலும்
நடு நிலையான மனதுடன் மீண்டும் உயர்ந்து நிற்கின்றன
உடைந்து நொருங்கியிருக்கும் உள்ளங்களை சுகப்படுத்துவதற்காக!

கண்ணீரையும், புன்னகையையும் அழைத்துச் சென்ற அப்பாதையின்
முட்களையும் காய்ந்த சருகுகளையும் விலக்கி விடும் நிலவு
சகுணம் வரும் வரையில் காத்து நிற்கின்றது
ஓயாத பயணம் செல்லும் வரையில்!!

**தே.வி.கால்லகே**

*அசல்வெசியாகே கவி பொத்தென்*
என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து

மனிதன் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தான் என்றால், இருட்டறையில் ஒரு தீபத்தை ஏற்றினான் என்று பொருள்.
- இங்கர்சால்

வலம்புரி

## பேரதிர்ச்சியை தோற்றுவிக்கும் க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்

குறித்த ஒரு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 2006 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறு பேறுகள் குறித்து யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள்பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளார்.

அவரின் ஆய்வு முடிபுகள் பேரதிர்ச்சி தருவனவாக அமைந்துள்ளன. குறிப்பாக க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடைந்த வீதம் மிகமிக சொற்பமாகும்.

சுருங்கக் கூறின் யாழ்.நகரப் பாடசாலைகளில் கணித பாடத்தில் உள்ள சித்தியடையாதோர் வீதத்தைக் கூட மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களின் கணித பாட சித்தி பெற்றிருக்கவில்லையென்பது வேதனைக்குரிய விடயமாகும்.

கணித பாடத்தில் காணப்படுகின்ற மிகப் பெரும் வீழ்ச்சிநிலை என்ற கவலையானது மாணவர்கள் கணித பாடத்தில் சாதாரண சித்தியைக் கூட எட்டவில்லை என்பது பற்றியதுதான்.

ஒரு பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் முப்பத்திரண்டு மாணவர்கள் தோற்றியிருந்தனர். எனினும் அவர்களில் ஒருவர் மட்டுமே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளார்.

இதுதவிர மற்றுமோர் பாடசாலையில் பதினேழு மாணவர்களில் எவருமே கணித பாடத்தில் சித்தியடையவில்லை என்பது வேறு கதை.

இவை தவிர சமய பாடத்தில் தோற்றிய மாணவர்களில் குறித்த வீதத்தினர் சித்தியடையவில்லை. ஆக, கணித பாடத்தில் உச்சநிலை அடைந்துள்ள சித்தியின்மை என்பது கணித பாடத்தில் மட்டுமன்றி சமய பாடத்திலும் கூட கனிசமானதாக இருப்பது மிகப் பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் சித்தியின்மைக்கான காரணங்கள் யாவை என்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே வேளை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறு பேறுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் யாழ். நகரப் பாடசாலைகள் உயர் தரப் பரீட்சைப் பெறு பேறுகளில் கோட்டை விட்டு விடுகின்றன.

அதிலும் குறிப்பாக உயர் தரத்தில் கணிதப் பிரிவு மற்றும் உயிரியல் விஞ்ஞானங்களில் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளை ஆய்வு செய்தால், மிகப் பெரும் அதிர்ச்சி அங்கு காத்திருப்பதைக் கண்டு கொள்ள முடியும்.

எனினும் நகரப் பாடசாலைகள் தமது பெறு பேற்றின் வீழ்ச்சியை கடல் நீரில் மிதக்கும் பனிக் கட்டி போல வெளித்தெரியாமல் அமிழ்த்தி வருகின்றன.

அத்துடன் கணிதம் மற்றும் உயிரியல் விஞ்ஞானத்தில் ஏற்படக் கூடிய வீழ்ச்சியின் வீதத்தைக் குறைத்துக் காட்டும் வகையில் கணித, விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்கான தகைமையை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் முடிபுகளுக்கு அப்பால் நுழைவுத் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

எதுவாயினும் யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சியை எவ்வகையிலும் நியாயப் படுத்த முடியாது. அதேநேரம் கல்வி வீழ்ச்சிக்கான முழுக் காரணத்தையும் யுத்த சூழ்நிலையில் கட்டிக்கழித்து விடவும் முடியாது.

மாறாக சமகாலத்துக் கல்வி முறைபற்றி கல்வியாளர்கள் சிந்தித்தாக வேண்டும். யாழ். இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த அ. பஞ்சலிங்கம் அவர்களின் கருத்தில், மரபுக் கல்வியை நாம் மறந்துவிட்டதன் விளைவுதான் கல்வி வீழ்ச்சி எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களிடையே 'மனனம்' என்பது முற்றாக இழந்து போய்விட்டது. இதனால் மூதுரை, ஆத்திசூடி ஆகிய நன்னூல்கள் எமது மாணவர்களின் மனனக் கற்றலில் செல்நெறிக்குள் தள்ளப்பட்டு விட்டது.

எனவே அவரின் கருத்தில் ஒப்படை, கணிப்பீடு என்ற புதிய கற்றல் செயற்பாடுகளை கடந்த, மரபுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றி சிந்திக்க வேண்டும் என்ற தொனிப்புத் தெரிகின்றது. இது பற்றிக் கல்வியியலாளர்கள் சாதகமாக ஆய்வு செய்ய வேண்டும்.

# தமிழர்களை வெளியேற்றியமை சிங்கள இனவாதத்தின் பெரும் அராஜக செயல்

## அமைச்சர் சந்திரசேகரன் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையானது சிங்கள இனவாதத்தின் பெரும் அராஜகச் செயல் என்று மகிந்த அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில்; கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களை பலவந்தமாக வாகனங்களில் ஏற்றி வெளியிடங்களுக்குக்கொண்டு சென்றிருப்பது அடிப்படை மனித உரிமைகளுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் விடப்பட்ட சவாலாகும்.

மனித உரிமைகளுக்கு தனிமதிப்புத் தருகின்ற நவீன உலகத்தில் எமது நாட்டில் நடந்திருப்பது சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிரான அநாகரியச் செயலாகும். ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களை மிருகங்களைப் போல நடத்திய சம்பவத்திற்கும் அவுஸ்திரேலிய பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்பட்ட மாபெரும் அநீதிக்கும் நிகரான ஜனநாயக விரோத செயலாகவே இச் சம்பவம் நடந்திருக்கின்றது.

தமிழர்கள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழத் தகுதி அற்றவர்கள் என்பதையும் அவர்களின் சுதந்திரமும் பாதுகாப்பும் தமிழர்களின் சொந்த மண்ணில் மட்டுமே இருக்க முடியும் என்பதையும் உலகத்திற்கு உணர்த்தும் செயலாகவே இச் சம்பவத்தை மலையக மக்கள் முன்னணி பார்க்கின்றது.

இலங்கையில் தலைவிரித்தாடும் இனவாதப் போக்கும் இனவிரோத அடக்கு முறையும் இன்னுமொரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. விடுதிகளில் தங்கியிருந்த முதியவர்களும் குழந்தைகளும் கடத்திக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள்.

ஏற்கனவே பல சம்பவங்களினால் விரக்தியின் விளிம்பில் வாழ்ந்த தமிழர்களில் ஒருசாராரே கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்தவர்கள். இவர்கள் விசாரிக்கப்படாமல் எதுவித அவகாசமும் வழங்கப்படாமல்இவர்களைப் பலவந்தமாக வெளியேற்றியிருப்பது பெரும் அராஜகமாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபதி மகிந்தவுக்கு அமைச்சர் சந்திரசேகரன் அனுப்பி வைத்துள்ளார்.

(ந-5)

# ரணிலின் செயற்பாடுகள் அதிர்ச்சியளிக்கின்றன

## அமைச்சர் ஜோன் செனவிரட்ண

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் அதிர்ச்சியளிக்கின்றன என்று மின்சாரத்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஜோன் செனவிரட்ண பேசுகையில்;

இலங்கை குறித்து அனைத்துலக சமூகத்தில் அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். வேறெந்தவொரு நாட்டிலும் எதிர்க்கட்சித்தலைவர் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை.

ரணிலின் செயற்பாடுகள் தேசப்பற்று அல்லாத வகையிலேயேயுள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தான் காரணமாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை நீக்கினார். அதேபோல் இந்திய அமைதிப் படையை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதாச ஒரு வார்த்தை நன்றி கூடக் கூறாமல் திருப்பியனுப்பினார். 1983 ஆம் ஆண்டு சம்பவங்களுக்குப் பின்னர் இந்தியா - இலங்கை உறவு மோசமடைந்தது என்றார் அவர்.

(ந-5)

# தோல்வியைச் சந்திப்பதாலேயே புலிகள் ஆயுதங்களை கீழே வைக்காவிட்டாலும் பேசத் தயார் என்கிறார் ஜனாதிபதி

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

பாதுகாப்புப் படையினர் வடக்கில் விடுதலைப்புலிகளிடம் தோல்விகளைச் சந்தித்து வருகின்றனர். அதனால்தான் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்காவிட்டாலும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழர்களும் முஸ்லிம்களும் வேறு நாட்டு மக்கள்என அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறுகூறினார். அவர் மேலும்கூறியதாவது;

மாவிலாறு மற்றும் சம்பூர் ஆகிய பிரதேசங்களில் பாதுகாப்புப் படையினர் கடந்த காலங்களில் வெற்றிகளைப் பெற்றனர். இந்நிலையில் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்குச் செல்வோம் என்று அரசாங்கம் கூறிவந்தது. ஆனால் ஜனாதிபதி திடீரென புலிகளுடன் யுத்தம் இடம் பெறும்போதே பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என்று அறிவித்துள்ளார். இது மக்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது பாதுகாப்புப் படையினர் வடக்கில் பாரிய தோல்விகளைச் சந்தித்து வருகின்றனரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பம்பைமடுப் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் 156 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதாகத் தெரிகின்றது.

இந்நிலையில் வடக்கில் இராணுவம் வெற்றிகளைப் பெறவில்லை என்பதுதெளிவாகின்றது. யுத்தத்தினால் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது என்பதை நாங்கள் ஏற்கனவே உணர்ந்துள்ளோம். அரசாங்கத்திற்கு உண்மையாகவே சமாதானத்தைக் கொண்டு வரும் தேவையிருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

யுத்தத்திற்காக பாரிய நிதி செலவிடப்படுகின்றது. ஆனால் யுத்தத்தில் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. நிதிதொடர்பான அனைத்து அதிகாரங்களும் நாடாளுமன்றத்திற்கே உள்ளன என்பதை அரசாங்கம்மறந்துவிடக் கூடாது.

ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை தற்போது அரசாங்கம் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளது. அதனால் தான் யுத்தம் செய்யும்போதே அரசாங்கம் பேச்சு நடாத்தத் தயாராகின்றது. எனவே இப்போதாவது உண்மை நிலையை அறிந்து கொண்டு சமாதானப்பேச்சுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்கின்றோம் என்றார் அவர்.

(ந-5)

# வெள்ளி நற்சிந்தனை 2

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

மனம் தூய்மையாகவிருந்தால் மகிழ்ச்சிக்குக்குறைவில்லை. ஒருவர் மனம் வேறுபடாமல் இருப்பது சிறப்பானதொரு குணநலமாகும். இன்றைய உலகில் இத்தகையவர்களைக் காண்பது அரிதாகவுள்ளது. உடனடித் தேவைகளை நிறைவேற்ற வேண்டித் தம்மையே தாழ்த்தும் பலர் உ‌ள்ளர். பிறர் மீது பழிமொழி கூறுதல், புறங்கூறல் என்னும் செயற்பாட்டில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகையோரை எம் முன்னோர் நன்கு இனங்கண்டுள்ளனர். மனிதரிடையே விரவி வாழும் இத்தகையோரைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்? முகத்துக்கு நேரே இனிக்கப் பேசிப், போக விட்டு புறங்கூறும் புல்லிய மனத்தவரும் பரிவுக்குரியவரே. அவர்களைக் கண்டால் எம்மை நாம் உறுதிபடைத்தவராய் மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒருவர் எம்மைப் பற்றி பிறரிடம் கொடிய கோள்களைச் சொல்லி எம்மைப்பற்றிய அபிப்பிராயத்தை மாற்றிவிடக் கூடும். அதனைக் கேட்டவரும் மனம் மயங்கிச் செயற்படவும் கூடும். இவ்விரு வகையினரும் அறிவு நிலையில் குறைவு பட்டவர்கள். மனத்தில் மாசு படிந்தவர்கள் இத்தகையோர் செயற்பாட்டைக் கண்டு அறிவுடையோர், தூய மனமுடையவர் கலங்க மாட்டார்கள்.

இதனை முன்னோர் கண்டு எம்மை ஆற்றுப்படுத்தியுள்ளனர். தம்மை கொடியவராக்கி மிகவும் பொல்லாத சொற்களைப் பேசி மனத்தைத் திரிபுபடுத்தும் மனிதரை நாம் காணும் போது எம்முடைய மனத்தையும் அவர்களைப் போல மாற்றி விடக் கூடாது. விளக்கிலே அசையாது நின்று எரியும் சுடர் போல மனந் திரியாமல் நிலை தளராது நிற்க வேண்டும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பெரியோர்களுடைய புறங்கூறும் இயல்பு கண்டு இன்று நமது சிறுவர் மனங்குழம்பியுள்ளனர். நல்லனவற்றையே தடுக்கும் சில பெரியவரைக் கண்டு அவர்களை வெறுக்க முற்படுகின்றனர். இந்நிலை நீடிப்பது நல்லது அல்ல. இளஞ்சிறாருக்கு ஏற்ற நல்லுரைக் கூறி தெளிவேற்படுத்துவது இன்றியமையாதது. இப்பணியைப் பல ஆண்டுகளுக்கு முன்பே 'நாலடியார்' செய்துள்ளது. அதனை மீளவும் நினைவிற்கொள்வது வாழ்வுக்கு நலம் தரும்.

'கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன் (று) இன்றித்
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்
விளக்கினுள் ஒண் சுடரே போன்று' (நாலடியார் 189)

## கைக்குண்டு வீச்சு சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் உள்ள வீடொன்றின் மீது கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்ட போதிலும் கைக்குண்டு வெடிக்காமையால் வீட்டில் உள்ளவர்கள் தெய்வாதீனமாக தப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் சுன்னாகம் பூதராயர் கோயிலடியைச் சேர்ந்த சாயீஸ்வரன் என்பருடைய வீட்டின் மீதே இக் குண்டு வீச்சு இடம் பெற்றது.

நேற்றுக் காலையில் இராணுவத்தினருக்கு வீட்டு உரிமையாளர் கொடுத்த தகவலையடுத்து இராணுவத்தினர் அந்த குண்டை அந்த இடத்தில் வெடிக்கவைத்தனர். (ந-5)

# வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் அழைத்துவர வேண்டும்

## நாடாளுமன்றில் மகேஸ்வரன் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் தற்காலிகமாக விடுதிகளில் தங்கியிருந்து வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் அழைத்துவரப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இவ் விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல்களை தடுக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டது யார்? என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கை தொடர்பில் அமைச்சர்கள் எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை. இது பொறுப்பான அரசு ஒன்றின் செயற்பாடு இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

## மட்டக்களப்பில் கண்ணிவெடி மூன்று படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புலுட்டுமானோடைப் பகுதியில் நிலக்கீழ் கண்ணிவெடியில் படையினரின் உழவு இயந்திரம் ஒன்று சிக்கியதில் மூன்று படையினர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று புலுட்டுமானோடைப் பகுதியினூடாக உழவு இயந்திரம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது புதைத்துவைக்கப்பட்ட நிலக்கீழ்க் கண்ணியில் உழவு இயந்திரம் சிக்கியதிலேயே படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். நிலக்கண்ணியில் சிக்கிய வாகனம் தூக்கி வீசப்பட்டு வெடித்துச் சிதறியுள்ளது. (ந-5)

## கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள்.



பொலிஸாரின் கண்காணிப்பில் வெளியேற்றப்படும் தமிழர்...



மேலாடை அணிவதற்கும் அனுமதி வழங்கப்படாமல் பஸ்ஸில் பயணிக்கும் பரிதாபம்...

## கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த...

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அவர்களை பஸ்களில் ஏற்றிய பொலிஸார் வடக்குக் கிழக்கில் உள்ள இடங்களுக்கு கொண்டு சென்றனர்.

சரியான காரணம் இல்லாமல் கொழும்பில் தங்கியிருப்பவர்களை தாம் பஸ்களில் ஏற்றி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிக்கு அனுப்பியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தமது தொழில் நிமிர்த்தம் கொழும்பில் தங்கியிருந்தவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாக, அவ்வாறு வெளியேற்றப்பட்ட சிலர் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகலாம் என்ற அச்சத்திற்கு மத்தியில் இந்த நடவடிக்கை தேவையானது என்று பொலிஸார் கூறுகின்றனர். இந்த நடவடிக்கை குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம்,

தகுந்த காரணம் இல்லாமல் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த சுமார் 376 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கூறியுள்ளது.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை ஒரு மனித உரிமை மீறல் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கண்டித்துள்ளனர்.

இந்த விவகாரம் நேற்று நாடாளுமன்றத்திலும் எழுப்பப்பட்டது.

*வெளியேற்றப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் வவுனியா வந்தடைந்தனர்.*

கொழும்பில் விடுதிகளில் தங்கிருந்த வட பகுதியைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் நேற்று சுமார் ஐந்து பஸ் வண்டிகளில் பொலிஸ் பாதுகாப்புடன் ஆண்கள், பெண்கள் இளைஞர்கள், யுவதிகள், பிள்ளைகள், வயோதிபர் என பல தரப்பட்டவர்களும் அடங்கிய இவர்களில் அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை வவுனியாவில் உள்ள ஐ.நா.வின் அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளும் பார்வையிட்டுச் சென்றார்கள்.

வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்புக்குச் சென்றவர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் உட்பட கொழும்பில் தொழில் புரிந்து வந்த சிலரும் வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உரிய காரணம் இன்றி தங்கியிருந்தார்கள் என்றும் பாதுகாப்பு காரணங்களுக்காகவே விடுதிகளில் தங்கியிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றியதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள இவர்கள் இன்று காலை வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படுவார்கள் என்றும் அதன் பின்னர் இவர்களை என்ன செய்வது என்பது குறித்து முடிபெடுக்கப்படும் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் தாங்கள் தங்கியிருந்த விடுதிகளில் இருந்து வெளியேற்றி வவுனியாவுக்குக் கொண்டு வந்தமையானது நாடு கடத்துவது போன்ற உணர்வையே தமக்கு ஏற்படுத்தியிருப்பதாக இவர்கள் கூறுகின்றனர். அடுத்தது என்ன என்பது தெரியாதிருப்பதாகவும் இவர்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர். (ந-5)

## மருந்துக் கலவையாளர் போட்டிப் பரீட்சை

மருந்துக் கலவையாளர் போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் எனவும், விண்ணப்பித்தோர் அனைவரும் பரீட்சைக்குத் தோற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-6)

## வடக்கு கிழக்கு...

தனிநாடு கிடைத்தே தீருமென நம்புவதாகத் தெரிவித்தார்.

இந் நாட்டில் வடக்குக் கிழக்கு என்பது தான் உங்கள் தாயகம். நீங்கள் அங்குதான் இருக்கமுடியும். நீங்கள் அதற்கு அப்பால் கொழும்புக்கு எல்லாம் வந்து இருக்க முடியாது. நீங்கள் அங்கு மீண்டும் போகவேண்டும் என்பதை ஒருமுறை அல்ல மூன்றாவது தடவையாக நிரூபித்திருக்கின்றீர்கள் என சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.குறிப்பிட்டுள்ளார்.

1956 ஆம் ஆண்டு அரசாங்கம் நிரூபித்தது. 1983 ஆண்டிலும் நிரூபித்தார்கள். கப்பல்களில் மக்களை ஏற்றி வடக்குக் கிழக்கிற்கு அனுப்பினார்கள். இன்று அதனை நிரூபித்துள்ளீர்கள்.

ஆகவே ஒரு வகையில் உங்கள் கொள்கை வகுப்பானது தமிழ் மக்களுக்கு நாங்கள் கூறுகின்ற தாயகம் என்பது வடக்கும் கிழக்கும் தான்.

நீங்கள் அங்குதான் போகவேண் டும் என்பதை அரசாங்கம் இன்றும் நிரூபித்துள்ளது என்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ந-5)

## யுதர்களை...

யேற்றப்பட்டது போன்றா நாம் செயற்படுகின்றோம் அப்புகழையா நீங்கள் எட்டப்போகின்றீர்கள்? யாராவது குற்றம் செய்துள்ளதாகத் தெரிந்தால் அவர்களை கைது செய்து நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தி தடுத்து வைப்பதே பொருத்தமானதாகும். அவ்வாறு குற்றஞ் செய்திருந்தால் தடுத்துவைத்திருக்க முடியும்.

இல்லாவிட்டால் விடுதலை செய்ய முடியும். சந்தேகத்திற்கிடமாக எவராது இருந்தால் அவர் மீண்டும் வரலாம். அவரை எவ்வாறு நாம் நிறுத்தப்போகின்றோம் என்றும் ரணில் கேள்வி எழுப்பினார். (ந-5)

## யாழ்.பல்கலைக்கழக...

யாப்பா தெரிவித்துள்ளார். வாகன வசதியில்லாத 129 உள்ளூராட்சி சபைகளுக்கு 'கப்' வாகனங்களை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமைச்சரவை முடிபுகளை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச் சர் மேற்படி தகவல்களை வெளியிட்டார். (ந-5)

## கொழும்பு விடுதிகளில்...

போனதாகவும் நாடாளுமன்ற ஒத்திவைப்பு விவாதத்தில் பதிலுரை ஆற்றும் போது அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாநகரம் விடுதலைப்புலிகளின் இலக்காக அமைந்துள்ளதுடன் பல் வேறு குற்றச்செயல்களைப் புரிவதற்கு விடுதிகளை அவர்கள் பயன்படுத்துவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

இவ் விடயங்களைக் கவனத்தில் கொண் டே பாதுகாப்பு பிரிவினர் இந்த நடவடிக்கைகளை எடுத்ததாகவும் எவரும் பலாத்காரமாக அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)


அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் 'நயினை நாகபூசணி அம்மன் பாமாலை' வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி,

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.3 இரண்டாம் ஒழுங்கை
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.





வெகு விரைவில் யாழ் நகரில் ...





...ன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.